Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 ◆ இதழ் Issue : 105 ◆ ஞாயிற்றுக்கிழமை Sunday ◆ 15.02.2026 ◆ பக்கங்கள் Pages:4 ◆ ₹ 6 ◆ ஈரோடு Erode

# தேர்வுகள் முடிந்ததும் மாணவர்களை கீழடி அருங்காட்சியகத்திற்கு அழைத்து வாருங்கள்

## பெற்றோர்களுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கோரிக்கை



சிவகங்கை மாவட்டத்தில், திருப்புவனம் அருகே உள்ள கீழடி அகழாய்வுத் தளத்தின் அருகிலேயே 4.5 ஏக்கர் பரப்பளவில் ரூ.24.30 கோடி செலவில் இந்த அருங்காட்சியகம் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலி வாயிலாகஇதைத்திறந்து வைத்தார். இந்தத் திறப்பு விழா மிகுந்த எதிர்பார்ப்புடன் நடைபெற்றது. ஏனெனில் கீழடி அகழாய்வுகள் தமிழர்களின் சங்க கால நாகரிகத்தைப் பற்றிய புதிய புரிதலைத் தந்துள்ளன.

இங்கு கண்டெடுக்கப்பட்ட செங்கல் கட்டடங்கள், வடிகால் அமைப்புகள், தமிழி எழுத்துகள் பொறித்த பாண்டங்கள் போன்றவை அப்படியே திறந்தவெளியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது,பண்டைய மக்கள் வாழ்ந்த அதே இடத்தில், அவர்களின் வாழ்வியலை நேரடியாக உணரும் வகையில் இந்த அருங்காட்சியகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு பெரிய அரங்குகளாக 65,000-க்கும் மேற்பட்ட சதுர அடியில் அமைக்கப்பட்ட இந்த இடத்தில், பழங்கால செங்கல் அமைப்புகளைப் பாதுகாத்து, விளக்கப் பலகைகள், செல்பி பாயிண்ட் போன்றவையும் உள்ளன. 'கீழடி நம் தாய்மடி' என்ற எழுத்துகளுடன் கூடிய இடங்கள் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே 2023-இல் திறக்கப்பட்ட கீழடி அருங்காட்சியகத்தில் 12 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர் என்று முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார். இப்போது இந்தத் திறந்தவெளி அருங்காட்சியகம் சேர்ந்ததால், கீழடி இன்னும் அதிக அளவில் மக்களை ஈர்க்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் திறக்கப்பட்டு இருப்பதாகவும் தேர்வுகள் முடிந்ததும் மாணவர்களைப் பெற்றோர் அழைத்து வாருங்கள் என்றும் முதலமைச்சர் ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.

கீழடியின் பானை ஓடுகளில் நாம் கண்டெடுத்த தமிழி எழுத்துகள், கடல் கடந்து, எகிப்து நாட்டின் பிரமிடுகளிலும் இடம்பெற்றுள்ள மகிழ்ச்சியை மேலும் பெருக்கிடும் வகையில், கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்திருப்பதாக குறிப்பிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம் நாவாய், ஈரோடு மாவட்டம் நொய்யல் அருங்காட்சியகங்களுக்கு அடிக்கல் நாட்டியிருப்பதாகவும், தமிழர் தொன்மையின் தடங்களைத் தேடித் தேடிக் கண்டறிந்து உலகுக்கு அறிவிப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.இந்தியத்துணைக்கண்டத்தின் வரலாற்றைத் தெற்கில் இருந்தே எழுதுவோம் என்றும் குறிப்பிட்டார்.

# ஜெயலலிதா பிறந்தநாளில் முதற்கட்ட வேட்பாளர்களை அறிவிக்கிறார் எடப்பாடி பழனிசாமி



மதுரை: சட்டசபை தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படாத நிலையில், ஜெயலலிதா பிறந்தநாளான பிப்.,24ல் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட அ.தி.மு.க., பொதுச்செயலாளர் பழனிசாமி திட்டமிட்டுள்ளார். 2021 தேர்தலில் 179 தொகுதிகளில் அ.தி.மு.க., போட்டியிட்ட நிலையில், இத்தேர்தலில் 164 தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க., கூட்டணி, அ.தி.மு.க., - பா.ஜ., கூட்டணி,நாம்தமிழர், த.வெ.க., என நான்கு அணிகள் உள்ளன. அ.தி.மு.க., தலைமையிலான கூட்டணியில் பா.ஜ., அ.ம.மு.க., பா.ம.க.,த.மா.கா., இந்திய ஜனநாயக கட்சி, புதியநீதிக்கட்சி,புதியபாரதம் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், உழவர் உழைப்பாளர் கட்சி, ஜனதாதளம் செக்யூலர் ஆகிய கட்சிகள் இணைந்துள்ளன. தே.மு.தி.க.,வும், புதிய தமிழகமும் இணைய வாய்ப்புள்ளது. கூட்டணி கட்சிகளுக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்கீடு செய்வது என்பது குறித்து தேர்தல் தேதி அறிவிப்புக்கு பின் கே.பி.முனுசாமி, தங்கமணி, வேலுமணி ஆகியோர் தலைமையிலான குழு பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. 2021 தேர்தலில் அ.தி.மு.க., கூட்டணியில் பா.ஜ., பா.ம.க., த.மா.கா., கட்சிகள் இடம்பெற்றிருந்தன. அப்போது அ.தி.மு.க., 179 தொகுதிகளிலும், பா.ஜ., 20, பா.ம.க., 23, த.மா.கா., 6 தொகுதிகளிலும் போட்டியிட்டு 39.71 சதவீதம் ஓட்டுகளை பெற்றன.

அதே கட்சிகள் இத்தேர்தலிலும் கூட்டணி அமைத்துள்ள நிலையில் தே.மு.தி.க., உள்ளிட்ட கட்சிகள் வர வாய்ப்புள்ளதால் அ.தி.மு.க., ஏற்கனவே வெற்றிபெற்ற,குறைந்த ஓட்டுகளில் வெற்றி வாய்ப்பை இழந்த 164 தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

எம்.ஜி.ஆர்., பிறந்த நாளான ஜன.,17ல் முதற்கட்ட தேர்தல் அறிக்கையை பழனிசாமி வெளியிட்ட நிலையில், ஜெயலலிதா பிறந்த நாளான பிப்.,24ல் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட திட்டமிட்டுள்ளார். கடந்த தேர்தலில் அ.தி.மு.க., போட்டியிட்ட 179 தொகுதிகளில் 33.29 சதவீதம் ஓட்டுகளை பெற்றது. இத்தேர்தலில் ஓட்டு சதவீதம் அதிகரிக்கும் என பழனிசாமி நம்பிக்கையுடன் உள்ளார். கூட்டணிக்கு எவ்வளவு 'சீட்' பா.ஜ.,வுக்கு 35 முதல் 40 தொகுதிகளை ஒதுக்க அ.தி.மு.க., முன்வந்துள்ளது. அ.ம.மு.க.,வுக்கு 8, பா.ஜ., 'கோட்டாவில்' இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சிக்கு தலா 2, புதிய பாரதம் கட்சிக்கு ஒன்று வழங்கப்படும்.

த.மா.கா.,வுக்கு 5, பா.ம.க.,வுக்கு 10, தே.மு.தி.க., சேரும் பட்சத்தில் 8, புதிய தமிழகத்திற்கு 2 தொகுதிகளை ஒதுக்க அ.தி.மு.க., முடிவு செய்துள்ளது. பா.ஜ., ஏற்பாட்டில் கூட்டணியில் சிறு கட்சிகள் இணையும் பட்சத்தில் அக்கட்சிகளுக்கு பா.ஜ., கோட்டாவில் 'சீட்' ஒதுக்க வாய்ப்புள்ளது.

# "புதுச்சேரியில் என்டிஏ அரசு ஊழலை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது"

## மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சு



புதுச்சேரியில் உள்ள என்டிஏ அரசு, ஊழலை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது, சுயமாக இயங்கும்அரசைஅளித்திருக்கிறது, அரசியல் ஸ்திரத்தன்மையை வழங்கி இருக்கிறது என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு உட்பட்ட காரைக்காலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: இரண்டு காரணங்களுக்காக நான் புதுச்சேரிக்கு வந்துள்ளேன். ஒன்று, பிரதமர் மோடி - முதல்வர் ரங்கசாமி ஆகியோரின் இரட்டை இன்ஜின் அரசாங்கம் புதுச்சேரிக்கு செய்துள்ள பணிகள் குறித்த அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்க வந்துள்ளேன். இரண்டாவது, இண்டியா கூட்டணியின் தீய நோக்கத்துடன் கூடிய முகத்திரையை கிழித்தெறிய வந்துள்ளேன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக, புதுச்சேரியில் இரட்டை இன்ஜின் அரசு அமைக்கப்பட்டது.புதுச்சேரியில் என்டிஏ அரசு மூன்று வேலைகளைச் செய்துள்ளது. ஒன்று, ஊழலை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இரண்டாவது, சுயமாக இயங்கும் அரசை புதுச்சேரியில் அமைத்திருக்கிறது. மூன்றாவது, இங்கே அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி இருக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு,பயங்கரவாத தாக்குதல்களுக்கு சரியான பதிலடி கொடுக்கப்பட்டது. புல்வாமா தாக்குதலுக்குப்பிறகுநாம்அவர்கள் பாகிஸ்தானில் தங்கி இருந்த இடத்தை குறி வைத்து சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடத்தினோம். இரண்டாவதாக,பாகிஸ்தானில் பதுங்கி இருக்கும் பயங்கரவாதிகளுக்குஎதிராகவான்வழி தாக்குதல்களை நடத்தினோம். இறுதியாக, ஆபரேஷன் சிந்தூரரை அரங்கேற்றி அவர்களின் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். இந்தியாவை தீய நோக்கத்துடன் பார்க்கும் எண்ணத்தை பிரதமர் மோடி அழித்துவிட்டார். அவர்,நாட்டு மக்களுக்கு வளமையை மட்டும் அளிக்கவில்லை, வலுவான பாதுகாப்பையும் அளித்துள்ளார். புதுச்சேரி மக்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி மீதும், பிஜேபி மீதும், மோடி மீதும், ரங்கசாமி மீதும் மிகுந்த நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். கடந்த 2021-ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தல்களில் புதுச்சேரி மக்கள் நமக்கு 44% ஆதரவு அளித்தார்கள். 30 தொகுதிகளில் 16 தொகுதிகளை நமக்கு அளித்தார்கள். இந்த முறை 60% வாக்குகளையும், 24 இடங்களையும் நாம் பெறுவோம். இதற்கு முன்பு புதுச்சேரியை ஆட்சி செய்த முன்னாள் முதல்வர் நாராயணசாமி, மிக மோசமான ஆட்சியை அளித்தார். அந்த மோசமான 5 ஆண்டுகளில் ஊழல் மட்டுமல்ல, அமைப்புகளும் சீர்கேட்டைச் சந்தித்தன. காந்தி குடும்பத்துக்கான ஏடிஎம் ஆக புதுச்சேரியை, நாராயணசாமி மாற்றி வைத்திருந்தார். அவரது ஒரே நோக்கம், காந்தி குடும்பத்தின் கஜானாவை நிரப்புவது மட்டும்தான். கல்வி நிலைய இடங்களை விற்றவர் நாராயணசாமி. எஸ்சி, எஸ்டி-க்கு ஒதுக்கப்பட்ட இடங்களைக் கூட அவர் ஏலம் விட்டார். அவரது ஆட்சிக்கால ஊழல் குறித்து சிபிஐ விசாரித்து வருகிறது. போக்குவரத்து மாஃபியாக்களுக்கு, புதுச்சேரியை முழுவதுமாக அவர் திறந்து விட்டார்.

# தமிழகத்தில் 19ந்தேதி முதல் மழைக்கு வாய்ப்பு; வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை:

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி தெற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் அடுத்த 48 மணிநேரத்தில் உருவாகக்கூடும்.

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் 18-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால்பகுதிகளில்வறண்ட வானிலை நிலவக்கூடும்.

20-ந்தேதி தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். பனிமூட்டம் பற்றிய முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை:

நாளை முதல் 19-ந்தேதி வரை வட தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் 15 ஆம் தேதி அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுவையில்ஓரிருஇடங்களில் 16-ந்தேதி அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

திருவள்ளூர், சேலம், தர்மபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் 17 ஆம் தேதி அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் 18 ஆம் தேதி அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் 19 ஆம் தேதி அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31-32° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-22° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:-

18-ந்தேதி மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென்தமிழக கடலோரப்பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



கடலூர் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் அவர்களை சந்தித்து செய்தியாளர்கள் யா.முனுசாமி,செ.முத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் தமிழ்நாடு பிரஸ் கிளப் செய்தியாளர்கள் சங்கத்தின் சார்பாக நினைவு பரிசு வழங்கினார்கள்.

# தமிழகம் முழுவதும் மசூதிகளில் நடைபெறும் இரவு நேர சிறப்பு தொழுகைக்கு வரும் இஸ்லாமியர்களுக்கு பாதுகாப்பு தேவை

## முதலமைச்சர் ஸ்டாலுனுக்கு காயல் அப்பாஸ் கோரிக்கை



தமிழகம் முழுவதும் மசூதிகளில்நடைபெறும் இரவு நேரசிறப்புதொழுகைக்கு வரும் இஸ்லாமியர்களுக்கு பாதுகாப்பு தேவை என - முதல்வருக்கு காயல் அப்பாஸ் கோரிக்கை வைத்துள்ளார்

இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

வருகிற 19-02-2026 வியாழக்கிழமை அன்று புனித ரமலான் மாதம் நோன்பு துவங்க உள்ளதால் இஸ்லாமியர்கள் அனைவரும் ரமலான் மாதத்தில் 30 நாட்களும் விடியற் காலை முதல் மாலை வரையிலும் நோன்பு இருந்து அதன் பின் மாலையில் நோன்பு திறந்து இரவு நேரம் மசூதிகளில் சிறப்பு தொழுகைகளும் நடை பெறுகின்றன.

மேலும் ரமலான் மாதத்தில் அடிக்கடி மின்சாரம் தடை ஏற்பட்டால் நோன்பு வைத்திருக்கும் இஸ்லாமியர்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக படுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு தடை இல்லா மின்சாரம் 30 நாட்களுக்கும் வழங்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது.

தமிழகம் முழுவதும் மசூதிகளில்நடைபெறும் இரவு நேரசிறப்புதொழுகைக்கு பெண்கள்,மற்றும் ஆண்களும் வருகின்றனர், ஆகவே அவர்களுக்கு எந்த வித அசம்பாவிதமும் நடைபெறாமல் அதனை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறப்பு தொழுகைகள் முடியும் வரையிலும்காவல்துறை பாதுகாப்பு வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்,மேலும் இரவு நேரங்களிள் சிறு சிறு தேநீர் கடைகளை இயக்க அனுமதி வழங்க வேண்டும் என தமிழக முதல்வர் மு .க ஸ்டாலின் அவர்களை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பாக கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# போதிய பராமரிப்பின்றி இருந்து வரும் சிவகங்கை பேருந்து நிலைய பொதுக்கழிப்பறை நடவடிக்கை எடுக்குமா நகராட்சி நிர்வாகம்?



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை பேருந்து நிலையத்திற்குள் உள்ள பொதுக் கழிப்பறை போதிய பராமரிப்பின்றியும், சரிவர சுத்தம் செய்யாமலும், வெளியில் சொல்ல முடியாத மிகவும் படுமோசமான அருவருக்கத்தக்க நிலையில் இருந்து வருவதாக பயணிகள் குற்றம் சாட்டினர். சிவகங்கை பேருந்து நிலையமானது தினம்தோறும் குழந்தைகள், பெண்கள், முதியோ ர்கள், கர்ப்பிணிகள் என ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்லும் பேருந்து நிலையம் ஆகும். இப்பேருந்து நிலையத்திற்குள் உள்ள பொது கழிப்பறையை தினசரி நூற்றுக்கண க்கானோர் பயன்படுத்தி வருகின்றனர். இக்குறிப்பிட்ட கழிப்பறையை போதிய பராமரிப்பின்றியும், சரிவர கழுவி சுத்தம் செய்யாமலும் இருந்து வருவதால் பலவிதமான நோய்த்தொற்று கிருமிகள் பரவி வருவதால் பொதுமக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்க போதிய நிதி வழங்கப்படுகிறதா, வழங்கப்படும் நிதியானது முறையாக செலவு செய்யப்படுகிறதா என பயணிகள் மற்றும் பொதுமக்கள் அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பினர்.

எனவே உடனடியாக மாவட்ட ஆட்சியர், மாவட்ட நிர்வாகம், நகராட்சி நிர்வாகம் உள்ளிட்டோர் தலையிட்டு பெரும் தொற்று மற்றும் நோய் பரவலில் இருந்து பேருந்து பயணிகள் மற்றும் பொதுமக்களை பாதுகாத்திட பேருந்து பயணிகள் முதியோர்கள் பெண்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தினர்.



காரைக்குடி அருகே பள்ளத்தூர் பேரூராட்சியில் சிவகங்கை மாவட்ட பொது சுகாதாரத் துறை நடத்தும் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் பள்ளத்தூர் சீதாலட்சுமி ஆட்சி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது,நகர் நல அலுவலர் டாக்டர்.சங்கர் மணி,குடும்ப நலத்துறை துணை இயக்குனர் டாக்டர்.அருள் தாஸ்,புதுவயல் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். ஆனந்தராஜ், பள்ளத்தூர் பேரூராட்சி சேர்மன் சாந்தி சிவசங்கர்,சீதாலட்சுமி ஆட்சி கல்லூரியின் தாளாளர், கல்லூரி முதல்வர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் உள்பட பலர்கலந்து கொண்டனர்.முகாமில் 18 துறை சிறப்பு மருத்துவர்கள்மற்றும் மருத்துவத்துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர். முகாமில் 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்,

# அனைத்து சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பில், ஈரோடு மாநகராட்சி அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து சங்கங்-



களும் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள 'அனைத்து சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு' சார்பில், ஈரோடு மாநகராட்சிஅலுவலகம்முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்நடைபெற்றது.மாநில ஒருங்கிணைப்பாளர் வி.எம்.வெங்கடசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தங்களது நியாயமான 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி ஊழியர்கள் முழக்கங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில், நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து கருவூலம் மூலம் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்க வேண்டும், அரசாணை 152 மற்றும் 10-ல் விடுபட்ட பணியிடங்களை உடனடியாக வழங்கவேண்டும்,நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கருணை அடிப்படை பணி நியமனங்களைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி உடனடியாக நிரப்ப வேண்டும் மற்றும் அரசாணை 338-ன் படி செயல்திறனற்ற பணியாளர்களுக்கு ரூ.1,900 தர ஊதியம் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தின் இடையே செய்தியாளர்களிடம் பேசிய மாநில ஒருங்கிணைப்பாளர் வெங்கடசாமி,"எங்களது கோரிக்கைகள் குறித்து ஏற்கனவே அமைச்சர்கள் மற்றும்துறைசார்ந்த அதிகாரிகளைச் சந்தித்து மனு அளித்துள்ளோம். எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், வரும் பிப்ரவரி 18-ம் தேதி (18.02.2026) மாநிலம் தழுவிய அளவில் ஒரு நாள் தற்செயல் விடுப்பு எடுத்துப் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம்.

அப்போதும் அரசு செவிசாய்க்கவில்லை எனில், அடுத்தகட்டமாக அனைத்துச் சங்கங்களும் ஒன்றிணைந்து தீவிரமான முடிவுகளை எடுப்போம்" என எச்சரிக்கை விடுத்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு மாநகராட்சி ஊழியர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டு தங்களது ஆதரவைப் பதிவு செய்தனர்.

# மதுராந்தகம் அருகே கோடிதண்டலம் பட்டுவாரி கிராமத்தில் நியாய விலை கடையை மரகதம் குமரவேல் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்





செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள வையா ஒரு ஊராட்சிக்கு உட்பட்ட வையாவூர் பட்டுவாரி நகர், புக்கத்துறை ஊராட்சியில் உட்பட்ட கோடிதண்டலம்,ஊராட்சியில் நியாய விலை கட்டிடம் கட்டித் தர பொதுமக்கள் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்தனர் அதன் பேரில் மூன்று புதிதாக நியாய விலை கடை கட்டுவதற்கான சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய நியாய விலை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது அந்த கட்டிடத்தை திறக்கும் நிகழ்ச்சியை மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் வி.ஜி.குமரன், கருங்குழி பேரூர் கழக செயலாளர், இவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து ரிப்பன் வெட்டி நியாய விலை கட்டிடங்களை திறந்து வைத்து பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.முன்னதாக புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் புரட்சித்தலைவி அம்மா திருவுருவப்படங்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர். பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஒன்றிய குழு பெருந்தலைவர் கீதா கார்த்திகேயன், ஒன்றிய குழு துணைத்தலைவர் குமரவேல் அப்பாதுரை, முன்னாள் கருங்குழி பேரூராட்சி மன்ற தலைவர் மஞ்சுளா புருஷோத்தமன்,மாவட்ட பிரதிநிதிரவி,புக்கத்துறை ஊராட்சி மன்ற தலைவர் எழிலரசன்,மதுராந்தகம் வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் பாலாஜி, மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பொருளாளர் குமார்,பட்டுவாரி நகர் கிளைச் செயலாளர் தேவேந்திரன், சுமதி,மற்றும் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## போச்சம்பள்ளி அருகே

# மது போதையில் இரு சக்கர வாகனத்தில் சென்ற வாலிபர் பனைமரத்தில் மோதி உயிரிழப்பு



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மொழுகுணூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ரமேஷ் 38. இவர் நேற்று இரவு போச்சம்பள்ளி அருகே உள்ள டாஸ்மாக் கடையில் மது பாட்டில்களை வாங்கிக் கொண்டு மது போதையில் இரு சக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு பாளேத்தோட்டம் அருகே உள்ள திப்பம்பட்டி கிராமம் அருகே சென்று கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனம் நிலை தடுமாறி அருகே இருந்த பனை மரத்தின் மீது பலமாக மோதியுள்ளது. இதில் தலையில் பலத்த காயம் அடைந்த ரமேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இரவு நேரம் என்பதால் யாரும் இதனை கவனிக்காத நிலையில் , இன்று காலை அவ்வழியே சென்ற பொதுமக்கள் போச்சம்பள்ளி போலீசாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் போலீசார் பிரேதத்தை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக போச்சம்பள்ளி அரசு பொது மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.இச்சம்பவம்குறித்துபோலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறந்த கைவினைஞர் விருது பெற்ற இலஞ்சி இராமசுவாமி பிள்ளை மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு

தமிழகஅரசின்பூம்புகார்தமிழ்நாடுகைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்பில் அடுத்த தலைமுறை கைவினை கலைஞர்கள் கைத்திறன்




போட்டிகளை மாநில அளவில் சென்னையில் வைத்து நடத்தியது. இதில் குறு சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா .மோ . அன்பரசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறந்த கைவினைஞர் விருது 2025 - 2026,வழங்கி பாராட்டினார். தென்காசி மாவட்டத்தில் இருந்து இவ்விருதுகளை இலஞ்சி இராமசுவாமி பிள்ளை மேல்நிலைப் பள்ளியின் ஆர்.பி .ஓவியக் கழக மாணவர்கள் 5 பேர் மட்டும் பெற்றனர்.

விருது பெற்ற மாணவர்கள் நிலோபர், சுபாஷ் ராஜவேல், ஹரி கோவிந்த ராஜா , மதன்ராஜ், முத்துராம் ஆகியோரை மாவட்ட ஆட்சித் தலைவர் கமல் கிஷோர் , முதன்மைக்கல்வி அலுவலர் ரேணு கா, மாவட்டக்கல்வி அலுவலர் கண்ணன் பள்ளிச் செயலாளர் ஐ சி சண்முக வேலாயுதம், தலைமை ஆசிரியர் ஆறுமுகம் நல்லாசிரியர் சுரேஷ்குமார் ஓவியஆசிரியர் கணேசன் மற்றும் ஆசிரிய ர்கள்,பொதுமக்கள் , பெற்றோர்கள் , மாணவர்கள் பாராட்டினர்.

# ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் கேப்டனாக ரியான் பராக் நியமனம்



ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் புதிய கேப்டனாக ரியான் பராக் (24 வயது) நியமிக்க ப்பட்டு ள்ளார்.

சிஎஸ்கேவில் இருந்து ராஜஸ்தான் அணிக்குச் சென்ற ஜடேஜாவுக்கு கேப்டன் வாய்ப்பு இருக்குமெனக் கூறப்பட்டு வந்த நிலையில், இந்த அறிவிப்பு ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.அஸ்ஸாம்மாநிலத்தைச்சேர்ந்த ஆல்ரவுண்டரான ரியான் பராக் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக 2019 முதல் விளையாடி வருகிறார்.

ராஜஸ்தான் அணிக்கு கேப்டனாக இருந்த சஞ்சு சாம்சன் சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணிக்கு மாறியதால், ஜடேஜா மற்றும் சாம் கரண் இருவரும் ராஜஸ்தான் அணிக்குச் சென்றனர்.

சமீபத்தில் ஐபிஎல் தொடரில் மிகவும் இளமையான கேப்டனாக ரியான் பராக் நியமிக்கப்ப ட்டுள்ளார்.

கடந்த சீசனில் 393 ரன்கள் மட்டுமே எடுத்த ரியான் பராக் மீது ராஜஸ்தான் அணி நம்பிக்கை வைத்து இந்தப் பொறு ப்பை அளித்துள்ளது.

மொத்தமாக 84 ஐபிஎல் போட்டிகளில் ரியான் பராக் 1, 566 ரன்களை 141.84 ஸ்டிரைக் ரேட்டில் எடுத்துள்ளார்.

ரியான் பராக் 2024 சீசனில் 573 ரன்கள் குவித்து அசத்தினார். இவரது அதிகபட்ச ஸ்கோரான 95 ரன்கள் கேகேஆர் அணிக்கு எதிராக அடித்திருக்கிறார்.

ராகுல் திராவிட் விலகிய பிறகு குமார் சங்ககாரா தலைமைப் பயிற்சியாளராகவும் அந்த அணியின் நிர்வாக இயக்குநராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

சிஎஸ்கே அணியில் இருந்து சென்ற மூத்த வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு கேப்டன் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது ரசிகர்களிடம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் (13.02.2026) அன்று மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் பிப்ரவரி மாத மாமன்ற அவசரக்கூட்டம் நடைபெற்றது. ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வே.செல்வராஜ் , மண்டல தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட மாநகராட்சி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய தீரன் சின்னமலைக்கு, அவரது கோட்டை இருந்த இடத்தில் கம்பீரமான சிலை அமைக்கப்பட்டுள்ளது. சென்னை கிண்டியில் உள்ள சிலையை ஒத்த இந்த சிலை அமைக்கும் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதற்கு கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். இந்த சிலை திறப்பு விழா ஓடாநிலையில் நடைபெற்றது.

# வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (VCET) மற்றும் VET கலை மற்றும் அறிவியல் கல்லூரி (VET IAS) மஞ்சள்26 கலாச்சார விழா





வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (VCET) மற்றும் VET கலை மற்றும் அறிவியல் கல்லூரி (VETIAS) இணைந்து மஞ்சள் 26 என்னும் பிரமாண்ட கலாச்சார விழா 13.02.2026 அன்று கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், புகழ்பெற்ற பின்னணி பாடகி ஜொனிதா காந்தி அவர்கள், ஈரோட்டில் முதல் முறையாக நேரலை இசை நிகழ்ச்சியை வழங்கினார், மேலும் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி அவர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது.


பிரபல தொகுப்பாளர் மற்றும் சிந்தனை ஊக்குவிப்பாளர் ஆரி அர்ஜுனன், மற்றும் விஜய் டிவி புகழ் தொலைக்காட்சி தொகுப்பாளர் மா.கா.பா. ஆனந்த் மற்றும் பாவனா பாலகிருஷ்ணன் மற்றும் சமூக வலைதளங்களில் பெரும் வரவேற்பைப் பெற்ற "பரிதாபங்கள்" யூடியூப் சேனலின் பிரபல யூடியூபர்கள் கோபி & சுதாகர், ஆகியோர் தலைமை விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவிற்கு வேளாளர் கல்வி அறக்கட்டளையின் தலைவர், செயலாளர் மற்றும் தாளாளர், மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கல்லூரி முதல்வர்கள், புலமுதல்வர்கள், நிர்வாக மேலாளர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். விழாவினை சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். வேளாளர் கல்வி அறக்கட்டளையின் செயலாளர் மற்றும் தாளாளர் S.D. சந்திரசேகர் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் S. பாலசுப்பிரமணியம் மற்றும் M.யுவராஜா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர், சிந்தனை ஊக்குவிப்பாளர் திரு. ஆரி அர்ஜுனன் அவர்களின் உரை மற்றும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இரவின் சிறப்பு நிகழ்வாக பாடகி ஜொனிதா காந்தி அவர்களின் நேரலை இசைநிகழ்ச்சி, அவரது அற்புதமான குரலால் ரசிகர்களை உற்சாகமூட்டியது. இறுதியாக, DJ இசைநிகழ்ச்சி இடம்பெற்று, இந்த உற்சாக மிக்க கலாச்சார விழா இனிதே நிறைவுபெற்றது.

# மாஜி ராணுவ தளபதியின் சர்ச்சை எதிரொலி; ஓய்வுபெற்ற அதிகாரிகள் புத்தகம் எழுதத்தடை: ஒன்றிய அமைச்சரவை அதிரடி முடிவு

புதுடெல்லி: முன்னாள் ராணுவ தளபதியின் புத்தக சர்ச்சையை தொடர்ந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் பணி குறித்து எழுத 20 ஆண்டுகள் தடைவிதிக்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. முன்னாள் ராணுவ தளபதி நரவனே தனது பணிக்காலம் குறித்து எழுதிய 'நான்கு நட்சத்திர விதி' என்ற சுயசரிதை நூல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதில் கடந்த 2020ம் ஆண்டு கிழக்கு லடாக் பகுதியில் இந்தியா மற்றும் சீனா ராணுவங்களுக்கு இடையே நடந்த மோதல் தொடர்பான ரகசிய தகவல்கள் இடம்பெற்றிருந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த புத்தகத்தின் சில பகுதிகள் அதிகாரப்பூர்வமாக வெளியாவதற்கு முன்பே இணையதளத்தில் கசிந்ததால், இது குறித்து டெல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விவகாரம் நாடாளுமன்றத்திலும் எதிரொலித்த நிலையில், சம்பந்தப்பட்ட புத்தகத்தின் வெளியீடு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தை தொடர்ந்து, நேற்று நடந்த ஒன்றிய அமைச்சரவை கூட்டத்தில் ஓய்வுபெற்ற அதிகாரிகள் புத்தகம் எழுதுவது குறித்து புதிய கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட உயர் பதவிகளில் இருந்தவர்கள் ஓய்வுபெற்ற பிறகு 20 ஆண்டுகள் வரை தங்களது பணி அனுபவங்கள் குறித்து கட்டுரை அல்லது புத்தகங்களை எழுததடை விதிக்கப்பட உள்ளது. இந்த காலத்திற்குப் பிறகு எழுத விரும்பினாலும் பாதுகாப்பு அமைச்சகத்திடம் உரிய அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட உள்ளது. இந்த விதிகளை மீறி ரகசியங்களை வெளியிடும் அதிகாரிகளின் ஓய்வூதியத்தை ரத்து செய்யவும் சட்டத்தில் திருத்தம் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.




# புதுச்சேரியில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட்டது தேர்தல் ஆணையம்




புதுச்சேரியில் இறுதி வாக்காளர் பட்டியல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. இது தேர்தல் ஆணையத்தின் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) என்ற திட்டத்தின் கீழ் நடைபெற்ற பெரிய அளவிலான பணியின் இறுதி கட்டம். கடந்த ஆண்டு அக்டோபரில் தொடங்கிய இந்த முழு செயல்முறை, வாக்காளர் பட்டியலை மிகத் துல்லியமாகவும் நம்பகமானதாகவும் ஆக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டது. முதலில், டிசம்பர் 16, 2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அப்போது புதுச்சேரியில் சுமார் 7.66 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால், அதற்கு முன்பு சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சுமார் 85,531 வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர். இறந்தவர்கள், இடமாறியவர்கள், தகுதியற்றவர்கள் போன்ற பெயர்களை அகற்றுவதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. வரைவு பட்டியல் வெளியான பிறகு, டிசம்பர் 16, 2025 முதல் ஜனவரி 15, 2026 வரை பொதுமக்கள் தங்கள் பெயரைச் சேர்க்க, நீக்கம் செய்ய அல்லது திருத்தம் செய்ய உரிமைகோரல்கள் மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டது. அரசியல் கட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி அலுவலர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகியோர் ஒருங்கிணைந்து பணியாற்றினர். பல கூட்டங்கள் நடைபெற்று, ஒவ்வொரு உரிமைகோரலும் சரியாக ஆய்வு செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சியர் மற்றும் தேர்தல் அதிகாரி குலோத்து ங்கன் தலைமையில், தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம் இந்தப் பணியை சிறப்பாக மேற்பார்வையிட்டது. இந்த நிலையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த இறுதி வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இறுதி வாக்காளர் பட்டியலில் புதுச்சேரியில் மொத்தம் 7,88,696 வாக்காளர்கள் இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# தூத்துக்குடியில் தொழிற்சங்கத்தினர் மறியல் போராட்டம்




ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத போக்கை கண்டித்து ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத 4 சட்ட தொகுப்புகளை நீக்க வலியுறுத்தியும், விவசாயத்தை அழிக்கும் விதை மசோதா மற்றும் மின்சாரசட்டம் 2025 ஐ கைவிட வேண்டும் எனவும் 100 நாள் வேலை திட்டத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகில் தொழிற்சங்கத்தினர் சார்பில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

ஒன்றிய அரசின் போக்கை கண்டித்து ஒன்றிய, மாநில அரசு கூட்டு நிறுவனமான என்டிபில் அனல் மின்நிலையத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் முழுமையாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் பணிகள் பாதிக்கப்பட்டன. இதே போல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், எல்.ஐ.சி நிறுவனங்கள் உட்பட்ட அரசு நிறுவனங்களில் பெரும்பாலான ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் வர்த்தகம் மற்றும் பணிகள் பாதிக்கப்பட்டன. தூத்துக்கு ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு தொழிலாளர் முன்னேற்ற சங்க தலைவர் சுசீ.ரவீந்திரன் தலைமை வகித்தார். சிஐடியு மாநில செயலர் ரசல், ஐஎன்டியுசி ராஜூ, ஏஐடியுசி பாலசிங்கம், தூத்துக்குடி மாவட்ட தலைவரும் (பிராந்திய ஆலோசனை குழு உறுப்பினர் தேசிய தொழிலாளர் கல்வி மற்றும் வளர்ச்சி வாரியம்) என்.ராஜ்குமார், மாவட்ட தலைவரும் கண்காணிப்பு உறுப்பினருமான ஆர்.ராஜலட்சுமி (தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாட்டு துறை) சிஐடியு மாநில துணை செயலாளர் (எஸ்இடிசி) பிச்சைமணி, ஐக்கிய விவசாயிகள் சங்கம் ராகவன் உட்பட திரளானோர் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர் சாலை மறியலில் ஈடுபட்ட 26 பெண்கள் உட்பட 151 பேரை போலிசார் கைது செய்தனர்.

# முதுமலை வனப்பகுதியில் வலம் வந்த 'ரிவால்டோ' யானை உயிரிழப்பு



நீலகிரி மாவட்டம் முதுமலை வனப்பகுதியில் வலம் வந்த யானைக்கு 'ரிவால்டோ' என பெயரிடப்பட்டது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ரிவால்டோ அதன் வழக்கமான வாழ்விடத்தில் காணப்படவில்லை.

இதையடுத்து மசினகுடி மற்றும் முதுமலை வனப்பகுதிகளில் வனத்துறையினர் அந்த யானையைத் தேடி வந்தனர். இந்நிலையில், வாழைத்தோட்டம் கிராமம் அருகே உள்ள கல்லட்டி கூடுதல் காப்புக்காட்டில், 'ரிவால்டோ' யானை படுத்த நிலையில் இருந்தது தெரியவந்தது.

அங்கு சென்ற வனக் கால்நடை மருத்துவர் ராஜேஷ்குமார் யானைக்கு சிகிச்சைகளை மேற்கொண்டார். ஆனால், சிகிச்சை பலனின்றி யானை உயிரிழந்தது. கடந்த 25 ஆண்டுகளாக இப்பகுதியில் வலம் வந்து நட்புடன் பழகிய 'ரிவால்டோ'வின் மறைவு முதுமலை சுற்றுவட்டார கிராம மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இது குறித்து முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் ஆர்.வித்யாதர் கூறியதாவது: 'ரிவால்டோ' என பெயரிடப்பட்ட 50 வயதான இந்த ஆண் யானை, தெப்பக்காடு யானை முகாமில் சில காலம் பராமரிக்கப்பட்டு, பின்னர் மீண்டும் வனப்பகுதியில் விடுவிக்கப்பட்டது.

தும்பிக்கையில் நிரந்தர குறைபாடு இருந்தபோதிலும், வனச்சூழலுக்கு ஏற்ப சிறப்பாக தன்னை மாற்றி கொண்டு, முதுமலை வனப்பகுதியை தனது வாழ்விடமாக கொண்டிருந்தது.

கல்லட்டி வனப்பகுதியில் உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில் இரு நாட்களுக்கு முன்பு யானை கண்டறியப்பட்டது. கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில், கடந்த 10ம் தேதி முதல் 12ம் தேதி வரை யானைக்கு ராகி, வெல்லம், புளி ஆகியவற்றுடன் கலந்து வாய்வழி மருந்துகள் மற்றும் ஹைபிரிட் நேப்பியர் புல் தீவனமாக அளிக்கப்பட்டது. மற்ற யானைகளுடன் மோதலால் ஏற்பட்ட காயங்கள் மற்றும் வயது முதிர்வு காரணமாக யானையின் உடல்நிலை மோசமடைந்து உயிரிழந்துள்ளது முதல் கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது என்றார்.

# திருச்சி அரசு மருத்துவமனையில் கடத்தப்பட்ட குழந்தை மீட்பு; பெண் கைது




திருச்சி அரசு மருத்துவமனையில் காணாமல்போன குழந்தை மீட்கப்பட்டுள்ளது.

திருச்சி அரசு மருத்துவமனையில் கடந்த பிப். 11 ஆம் தேதி விக்னேஷ்- சுகன்யா தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்தது.

இந்நிலையில் குழந்தைக்கு தடுப்பூசி போடுவதாகக் கூறி பெண் ஒருவர் குழந்தையைக் கடத்திச் சென்றுள்ளார்.

குழந்தை காணாமல் போனதையடுத்து காவல்துறையினர் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு தேடி வந்த நிலையில், குழந்தை இன்று பத்திரமாக மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குழந்தையைக் கடத்திய பெண்ணை துறையூர் அருகே காவல்துறையினர் கைது செய்துள்ளனர். குழந்தை இல்லாத ஏக்கத்தில் எடுத்துச் சென்றதாக கைதான மீனாட்சி என்பவர் வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தூத்துக்குடியில் 42வது வார்டு பகுதியில் புதிய நியாயவிலை கடையை அமைச்சர் கீதாஜீவன் திறந்து வைத்தார்



தூத்துக்குடி மாநகராட்சி பகுதியான 42வது வார்டுக்கு உட்பட்ட சிவந்தாகுளம் சாலையில்,சட்டமன்றத்தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட புதிய நியாயவிலைக்கடையைச்சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் இன்று திறந்து வைத்தார். விழாவில் தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா மற்றும் 42வது வார்டு மாமன்ற உறுப்பினரும் மாநகராட்சி மேற்கு மண்டல தலைவருமான அன்னலட்சுமி அமைச்சரை வரவேற்று சால்வை அணிவித்து வரவேற்றனர்.

திறப்பு விழாவில் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில், கடந்த நான்கரை ஆண்டுகளில் தூத்துக்குடி தொகுதியில் மட்டும் 784 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி, பூங்காக்கள், நகர் நல மையங்கள் மற்றும் பள்ளிக் கட்டிடங்கள் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் உரிமைத் தொகை தற்போது பிப்ரவரி,மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான நிலுவைத் தொகை மற்றும் கோடைகால சிறப்புத் தொகை என மொத்தம் 5,000 ரூபாய் பயனாளிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

தமிழகம் அனைத்துத் துறைகளிலும்முதன்மை மாநிலமாகத்திகழ்கிறது. குறிப்பாக, முதியோர்களுக்கு அவர்களது இல்லத்திற்கேசென்று அத்தியாவசியப் பொருட்களை வழங்கும்'தாயுமானவன் திட்டம்' மற்றும் தரமான ரேஷன் பொருட்கள் தட்டுப்பாடின்றி வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், கூட்டுறவுத்துறைதுணைப்பதிவாளர் சுப்புராஜ், சார்பதிவாளர் அந்தோணி பட்டுராஜ், பெருமாள் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் செந்தில்குமார் மற்றும் அரசு அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரியில் அல்கோரிதம் 26 எனும் நிகழ்வு நடைபெற்றது

## தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது




கோவை அரசூர்பகுதியில் உள்ள, கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் "அல்கோரிதம் 26" எனும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. தொழில்நுட்ப நிகழ்வுகளாக டிஜிட்டல் எஸ்கேப் ரூம், பேப்பர் பிரசன்டேஷன், கோட் பேட்டில் ராயல், மினி ஹேக்கத்தான், ரிவர்ஸ் இன்ஜினியரிங், மாஸ்டர் தி ப்ராம்ப்ட் ஆகியவை நடைபெற்றன. தொழில்நுட்பம் சாராத நிகழ்வுகளாக சோலோ டான்ஸ், குரூப் டான்ஸ், ஸ்க்விட் கேம் ஆகியவை நடைபெற்றன. மிட்டாய்க்கடை மற்றும் ஸ்நாக் ஸ்ட்ரீட் போன்ற சிறப்பு ஈர்ப்புகளும் இந்நிகழ்வில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பங்கேற்ற மாணவர்கள், தங்களின் திறமையை வெளிப்படுத்தி,புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொண்டனர்.இந்நிகழ்வின்மூலம், மாணவர்களின் திறமை மற்றும் தன்னம்பிக்கை வளர்ச்சி பெற்றது. கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.கீதா,இந்நிகழ்வின் வெற்றிக்கு வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளி அறிவுத்திறன் மற்றும் தரவு அறிவியல் துறை தலைவர் முனைவர் கே.பிரதீபா, தரவு பகுப்பாய்வுடன் கணினி அறிவியல் துறை தலைவர், மற்றும் செயற்கை நுண்ணறிவு துறை தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பதுகுறிப்பிடத்தக்கது

# மக்களை சந்திக்க மறுக்கும் கோவை மாவட்ட ஆட்சியரை இடமாற்றம் செய்ய வேண்டும்

## தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணைத்தலைவர், வழக்கறிஞர் புஸ்பாணந்தம் தமிழக அரசுக்கு விடுத்த பரபரப்பு கோரிக்கை



கோவை சிவாஜி காலனி பகுதியில் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் அலுவலகம் முன்பு தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் பெயர் பலகை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை இக்கட்சியின் மாநில துணை தலைவரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம்ரிப்பன்வெட்டி பெயர்பலகையை திறந்து வைத்தார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய வழக்கறிஞர் புஸ்பாணந்தம் கூறியதாவது..வருகின்றசட்ட மன்ற தேர்தலில் மக்கள் பணியாற்ற வேண்டும் என்று,சட்டமன்றஉறுப்பினர் பதவிக்கு, கவுண்டம்பாளையம் தொகுதியில்நிற்கஉள்ளதாகவும், கடந்த 2024ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டதாகவும் கூறினார். மேலும் மக்களுக்கு சேவை செய்ய மக்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று இந்த தேர்தலில் களமிறங்க உள்ளதாக கூறினார். மேலும்கோவை மாவட்டத்தில் உள்ள ஆட்சியர், மாவட்ட குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், முதல் வாரத்தில் மட்டும் பொதுமக்களை சந்திப்பதாகவும், மற்ற மூன்று வாரங்களும் ஆட்சியர் மக்களை சந்திப்பதில்லைஎனவே,மாவட்ட ஆட்சியரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் தமிகம முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பில் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியில், கணுவாய் ராதாகிருஷ்ணன், வெங்கட், சுரேஷ் குமார் அன்னூர் அருள், வைத்தியர் பாலகிருஷ்ணன், போலிஸ் சுரேஷ், ரங்கப்பன், பைனான்ஸியர் பெருமாள் வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் லட்சுமி, திவ்யா, ஜெபா மோகன் ராஜா, வர்ஷா, வர்ஷினி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் A.R. ராகுல் நாத் ஈரோடு மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான பணிகளின் முன்னேற்ற நிலை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் ஆகியவை, படிவம் 6, 7 மற்றும் 8 ஆகிய மனுக்களின் பரிசீலனை, வாக்காளர் பட்டியல் துல்லியமாகவும் பிழையற்றதாகவும் தயாரித்தல், வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் தரவு முரண்பாடுகளைச் சரிசெய்வது மற்றும் வாக்குச்சாவடி மறுசீரமைத்தல் உள்ளிட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி துணை ஆணையர்தனலட்சுமி, கோபிசெட்டிபாளையம் சார்ஆட்சியர் சிவானந்தம், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி காஞ்சன் சௌதரி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, அனைத்து சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூரில், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி வெங்கடாசலம் எம்.எல்.ஏ தலைமையில், தமிழக அரசின் மகளிர் உரிமைத் தொகை ( ரூ.5000/) வழங்கும் திட்டத்தை திமுகவினர் கொண்டாடினர். இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, அந்தியூரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் சென்று, பட்டாசுகள் வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பேரூராட்சி தலைவர் பாண்டியம்மாள், துணைத் தலைவர் பழனிசாமி, வர்த்தக அணி அமைப்பாளர் கே.பி.எஸ் மகாலிங்கம், தெற்கு ஒன்றிய செயலாளர் நாகேஸ்வரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி ஊராட்சி பகுதியில் 560 பேருக்கு இலவச வீட்டுமனைபட்டா எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ.வழங்கினார்



தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் ஆறு இடங்களில் உள்ள சுமார் 560 பயனாளிகளுக்கு இலவச இ-பட்டா வழங்கும் நிகழ்ச்சி தாளமுத்துநகர் தனியார் மஹாலில் நடைபெற்றது.

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மாதா நகர், ஆனந்த்நகர், ஜேசு நகர், சமீர்வியாஸ் நகர், ஆரோக்கியபுரம், பாலதாண்டாயுத நகர் ஆகிய பகுதிகளை சார்ந்த 560 பயனாளிக்களுக்கு ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா இலவச வீட்டுமனை பட்டாவை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் திருமணி ஸ்டாலின்,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ராஜேந்திரன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ்,மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி நெல்சன்,

ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன்,

மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன்,சேவியர்,பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், பாரி மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

# தவெக சார்பில் விருப்ப மனுக்கள் கொடுக்க அவகாசம்



தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான விருப்ப மனு விநியோகப் பணி கடந்த பிப்ரவரி 6-ஆம் தேதி தொடங்கியது.

கட்சியின் தலைவர் ஜோசப் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் போட்டியிட விரும்பும் கழகத் தொண்டர்கள் தங்கள் விருப்பத்தைப் பதிவுசெய்ய இந்தவிருப்ப மனு வழங்கப்பட்டது. முதல் நாளிலேயே பனையூர் தலைமை நிலைய அலுவலகத்தில் மிகுந்த ஆர்வத்துடன் நிர்வாகிகளும் தொண்டர்களும் குவிந்தனர். முதல் மனு கட்சித் தலைவர் விஜய் பெயரில் பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து பொதுச்செயலாளர் என். ஆனந்த் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் தங்கள் மனுக்களைப் பெற்றனர்.

கட்சியின் அதிகாரப்பூர்வ இணையதள இணைப்பு அல்லது QR குறியீடு மூலம் மனு பெறும் வசதி செய்யப்பட்டது.

மனுவில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் முழுமையாக நிரப்பி,தேவையான ஆவணங்களை இணைத்து, பிப்ரவரி 14-ஆம்தேதிவரைநேரிலோ, கொரியர் மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ தலைமை அலுவலகத்துக்கு அனுப்பலாம் என்று தெளிவாக அறிவிக்கப்பட்டது. வரும் இருபதாம் தேதி வரை விருப்ப மனுக்கள் வழங்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சித் தொண்டர்களின் கோரிக்கைக்கு இணங்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த நேரத்தை பயன்படுத்தி விருப்ப மனுக்கள் கொடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.